தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.7.2025) சென்னையில் நடை பெற்ற, பேராசிரியர் மருத்துவர் கே.கே. இராமலிங்கம் அவர்களின் 90ஆவது பிறந்தநாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, அவருக்கு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி, வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மகாராஷ்டிரா ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணன், முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியும், முன்னாள் கேரளா ஆளுநருமான பி. சதாசிவம் ஆகியோர் உடனிருந்தனர்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் - மகளிர் சுய உதவிக்குழுவின் செயல்பாடுகள்!

சு.ஆண்டாப்பட்டு ஊராட்சியில் – சுய உதவிக்குழுவினருடன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலந்துரையாடி ஆய்வு!

திருவண்ணாமலை, ஜூலை 14- துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.7.2025) திருவண்ணாமலை மாவட்டம் சு.ஆண்டாப் பட்டு ஊராட்சியில், தமிழ்நாடு ஊரக வாழ் வாதார இயக்கத்தின் சார்பில் செயல்பட்டு வரும் சு.ஆண்டாப்பட்டு ஊராட்சி அள விலான கூட்டமைப்பின் உறுப்பினர்களுடன் குழுவின் செயல்பாடுகள் குறித்து கலந்து ரை யாடினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெண்கள் பொருளாதார சுதந்திரம் காண வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையுடன் முதன் முறையாக 1989–ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்களை தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்து முதலமைச்சர் அவர்கள், உள்ளாட்சித் துறையின் அமைச்சராக, துணை முதலமைச்சராக இருந்தபோது மாவட்டந் தோறும் சென்று லட்சக்கணக்கான மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கணக்கு புத்தகம் தொடங்கி வைத்து, பொருளாதாரக் கடன், சுழல் நிதிக் கடன் உள்ளிட்டவற்றை வழங்கி பெண்கள், வங்கிகளுக்கு தன்னம்பிக்கையுடன் சென்று தாங்களே வங்கிப் பணிகளை மேற்கொள்ளும் நிலைக்கு உயர்த்தினார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான 'திராவிட மாடல்' அரசு அமைந்தது முதல் தற்போது வரை தமிழ்நாடு முழுவதும் 1,49,767 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக தற்போது தமிழ்நாட்டில் 53,74,000 உறுப்பின ர்களுடன் 4,76,000 மகளிர் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் தமிழ்நாடு முழுவதும் 19,12,927 குழுக்களைச் சேர்ந்த 2,48,68,051 உறுப்பினர்களுக்கு 1,20,240 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்புகள் வழங்கி தமிழ்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஒரு முக்கிய அங்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கியுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 10,51,976 மகளிருக்கு 5,125.33 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்புகள் வழங்கப்பட்டு, மகளிர் பொருளாதார முன்னேற்றம் அடைந்து வருகின்றார்கள்.

சு.ஆண்டாப்பட்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் 16 மகளிர் சுய உதவிக் குழுக்கள், 1 முதியோர் குழு சுய உதவிக் குழு, 1 மாற்றுத்திறனாளி சுய உதவிக் குழு என மொத்தம் 18 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 246 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களுக்கு பல்வேறு நிர்வாக பயிற்சிகளும், வேலைவாய்பு பயிற்சிகளும் அளிக்கபட்டு வேலைவாய்ப்புகள் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று திருவண்ணா மலை மாவட்டம் சு. ஆண்டாப்பட்டு ஊராட்சியில், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் செயல்பட்டு வரும் சு.ஆண்டாப்பட்டு ஊராட்சி அளவிலான கூட்ட மைப்பின் உறுப்பினர்களுடன் குழுவின் செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடினார்.

அப்போது இவ்வூராட்சியில் குழு உறுப்பினர்கள் கரும்பு விவசாயம், பூந்தோட்டம், காய்கறி சாகுபடி உள்ளிட்ட விவசாயம் சார்ந்த தொழில்களும், கறவை மாடு, ஆடு வளர்ப்பு, தையல், துணி வியாபாரம் செய்தல் உள்ளிட்ட பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடல் கூட்டத்தில் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் ச. உமா, மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ், மற்றும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் ரயில் நிலையம் அருகில்

சரக்கு ரயில் தீ விபத்து! அமைச்சர் ஆவடி சாமு.நாசர் நேரில் ஆய்வு!

அருகாமையில் உள்ள வீடுகளில் இருந்து சிலிண்டரை தூக்கிச் சென்று மீட்பு பணியில் ஈடுபட்டார்!

திருவள்ளூர் ஜூலை 14; சென்னை மணலியிலிருந்து எரிபொருள் ஏற்றிச் சென்ற சரக்கு ரயில் திருவள்ளூர் ரயில் நிலையம் அருகில் தடம்புரண்டு தீ விபத்து ஏற்பட்டது. திருவள்ளூர் ரயில் நிலையம் அருகே டீசலை ஏற்றிக்கொண்டு ஆந்திரா நோக்கி புறப்பட்டுச் சென்ற சரக்கு ரயில் நேற்று (ஜூலை 13) அதிகாலை 5.20 மணியளவில் திடீரென தடம் புரண்டது. இதனால் இன்ஜினுக்கு அடுத்ததாக உள்ள பெட்டிகள் தீப்பிடித்தன. 52 பெட்டிகளைக் கொண்ட சரக்கு ரயிலில் 4 பெட்டிகள் தீயில் முழுமையாக சேதமடைந்துள்ளன . இதனால் திருவள்ளூர் வழியாக செல்லக்கூடிய அனைத்து மின்சார மற்றும் எக்ஸ்பிரஸ் ரயில்களும் நிறுத்தப்பட்டுள்ளன. ஆவடி மற்றும் அரக்கோணத்தில் இருந்து பேரிடர் குழுவை மாவட்ட நிர்வாகம் அழைத்து மீட்பு பணியில் ஈடுபட்டார்கள் பொது மக்கள் பயணம் செய்வதற்கு வசதி மாவட்ட நிர்வாகம் சார்பில் சிறப்பு பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

திருவள்ளூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள தீயணைப்பு நிலையங்களில் இருந்து 10க்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்கள் மூலம் வீரர்கள் விரைந்து வந்து தீவிர முயற்சியில் ஈடுபட்டு தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். முன்னதாக தகவல் அறிந்த தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் விபத்துக்குள்ளான இடத்தை உடனடியாக நேரில் சென்று பார்வையிட்டார்.

அப்போது தீ விபத்துக்குள்ளான இடம் அருகே ஒரு பெண்மணி வீட்டிலிருந்து கேஸ் சிலிண்டரை தூக்க முடியாமல் அவதிப்பட்டு வந்தார். இதைப் பார்த்த அமைச்சர் உடனடியாக அந்த சிலிண்டரை தூக்கி க்கொண்டு சென்று மீட்பு பணியில் ஈடுபட்டார் .

மேலும் பழங்குடியினர் குடியிருப்பு பகுதிகளில் உள்ளவர்களுக்கு நேரில் சென்று ஆறுதல் கூறி, அவர்களுக்கு உணவு, பால், குடிநீர் உள்ளிட்டவைகளை வழங்கினார்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து அமைச்சர் ஆவடி நாசர் பேசுகையில்,

சென்னை, ஐ.ஓ.சி.எல் மணலியில் இருந்து ஜோலார் பேட்டை நோக்கி பெட்ரோலியப் பொருட்கள் (எண்ணெய்) ஏற்றிச் சென்ற ரயில் (52 பெட்டிகள்) அதிகாலை 5.20 மணிக்கு திருவள்ளூர் ரயில் நிலையம் அருகே தீப்பிடித்து விபத்துக்கு ள்ளானது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்கிணங்க மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பாக முன்னெச்சரிக்கை மற்றும் மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிட்டு. அனைத்து பணிகளும் துரிதமாக நடைபெற்று வருகிறது.

52 ரயில் பெட்டிகளில் நான்கு பெட்டிகள் முற்றிலுமாக எரிந்து சேதமடைந்தது மீதமுள்ள பெட்டி எரிந்து கொண்டிருந்த நிலையில் உள்ளது. அதை அணைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்த விபத்தால் ரயில் போக்குவரத்து முற்றிலுமாக தடைப்பட்டு உள்ளது. இதற்கு மாற்று ஏற்பாடாக பேருந்து வசதிகள் போக்குவரத்து துறை வாயிலாக ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. விபத்து நடைபெற்ற பகுதியை சுற்றியுள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகளான உணவு, குடிநீர் மற்றும் தங்குவதற்கான தற்காலிக இடங்கள் ஆகியவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள மருத்துவர்கள் செவிலியர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டு அனைத்து முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகளுக்கும் மாவட்ட நிர்வாகம் சிறப்பாக முறையில் செயல்பட்டு துரிதமாக நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்தார்.

அந்த ஆய்வின் போது ரயில்வே ஐ.ஜி எ.ஜி பாபு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாச பெருமாள், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சுரேஷ், நகர மன்ற தலைவர் உதய மலர் பாண்டின் , நகர்மன்ற துணைத் தலைவர் சி.சு. ரவிச்சந்திரன், அரசு அதிகாரிகள் காவல்துறையினர் தீயணைப்பு வீரர்கள் ரயில்வே துறை அதிகாரிகள் கழக நிர்வாகிகள் நகர மன்ற உறுப்பினர்கள் பலர் இருந்தனர்

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தை தொடங்கி வைக்க

இரயில் மூலம் இன்று மாலை சிதம்பரம் செல்லும்

முதல்வருக்கு தாம்பரம் இரயில் நிலையத்தில் வரவேற்பளித்து - வழியனுப்பும் நிகழ்ச்சி!

கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்பீர்! அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் !

காஞ்சிபுரம், ஜூலை 14 -

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தை தொடங்கி வைக்க தாம்பரத்தில் இருந்து இரயில் மூலம் இன்று மாலை சிதம்பரம் செல்லும் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினர், தாம்பரம் இரயில் நிலையத்திற்கு இன்று மாலை 5.00 மணியளவில் கழக கொடி பதாகைகளை ஏந்தி திரண்டு வந்து, தாம்பரம் இரயில்வே நிலையம் 10வது நடைமேடையில் உற்சாகமாக வரவேற்பு அளித்து வழியனுப்பி வைத்திட வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழ்நாடு முதல்வர் அவர்கள் ஆணைப்படி "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ், நாளை ஜூலை 15ஆம் தேதி முதல் நவம்பர் மாதம் வரை தமிழ்நாடு முழுவதும் 10,000 முகாம்கள் நடத்தப்பட உள்ளன.

இத்திட்டத்தின் கீழ், நடத்தப்படும் முதல் முகாமினை சிதம்பரம் நகராட்சியில் முதல்வர் அவர்கள் நாளை காலை தொடங்கி வைக்கிறார்.

"உங்களுடன் ஸ்டாலின்" என்ற திட்டத்தை தொடங்கி வைப்பதற்காக தாம்பரத்தில் இருந்து இன்று மாலை இரயில் மூலம் சிதம்பரம் செல்லுகிறார்.

தாம்பரத்தில் இருந்து ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் இரயில் மூலம் சிதம்பரம் செல்லும் தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் அவர்களுக்கு, தாம்பரம் இரயில் நிலையத்தில் உள்ள 10வது நடைமேடையில் இன்று மாலை 5.00 மணியளவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

(தா.மோ.அன்பரசன்)

எனது தலைமையில், மேள தாளம், பேண்டு வாத்தியம் முழங்க பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள, நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து, தமது கரங்களில் கழகத்தின் இரு வண்ணக் கொடியையும் வரவேற்பு பதாகைகளையும் ஏந்தி நின்று உற்சாக வரவேற்பு அளித்து - வழியனுப்பிட வேண்டும் என்று மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

இம் மாபெரும் வரவேற்பு வழியனுப்பி வைக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்பது "நமது கடமை", "நமது உரிமை" என்ற அந்த லட்சிய உணர்வோடு மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் பல்லாயிரக்கணக்கில் அலைகடலென திரண்டு பங்கேற்கும்படி அன்புடன் கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

கழக துணை பொதுச் செயலாளர் ஆ. ராசா எம்.பி. நேற்று 13.7.2025 சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி 125 வது வட்டம் கயிலாசபுரம் பகுதியில் வீடு வீடாக கழக உறுப்பினர் சேர்க்கை பணியில் உறுப்பினர்கள் சேர்த்தார். உடன் மயிலை கிழக்கு பகுதி கழக செயலாளர் எஸ்.முரளி, தகவல் தொழில்நுட்ப அணி மாநில நிர்வாகிகள் சி.எச். சேகர், வழக்கறிஞர் சரவணன், தலைமை செயற்குழு உறுப்பினர் ராஜ காந்தம், வர்த்தக அணி மோகன், வட்ட கழக செயலாளர் அ. தவநேசன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் த. விக்னேஸ்வரன், மாவட்ட பிரதிநிதி ம. ஜெயகோபி, 126 வது பாக பொறுப்பாளர் இ. துரை கண்ணன், சிறுபான்மை பகுதி அமைப்பாளர் செ. தீபன், எம். புகழேந்தி, பூங்கொடி, எஸ்.கோபி மற்றும் பாகமுகவர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பல்லாவரம் தெற்கு பகுதி திமுக இளைஞர் அணி சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா மற்றும் நாடு போற்றும் நான்காண்டு கழக அரசின் சாதனை விளக்க மாபெரும் தெருமுனை கூட்டம் பகுதி இளைஞரணி அமைப்பாளர் எஸ். சாகுல் ஹமீது தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் கழக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரை ஆற்றினார். உடன் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ., மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதிச் செயலாளர் இ. எஸ்.பெர்னார்ட், அ. தமிழ்மாறன் தலைமைக் கழக பேச்சாளர்கள் நாத்திகம் நாகராஜன் சிலம்பரசன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு D. பிரகாஷ், கோ. ஜானகிராமன் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி. கே. ஏ. சத்திய பிரபு , ஜெ. இன்சா மாம் ச. பிரபு, மாநகர பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பகுதிகழக நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்